# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 01.04.2026**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண்கள். CP 3876/SCIC/2023 & CP 4077/SCIC/2023**

திரு அ.தினேஷ்குமார் புகார்தாரர்
321, ராயல் நகர், வடக்கு மாதவி ரோடு
பெரம்பலூர் - 621 212.

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
சார் பதிவாளர் ....... பொதுஅதிகார அமைப்பு
சார் பதிவாளர் அலுவலகம்
செட்டிக்குளம், பெரம்பலூர்-621 104.

**ஆணை**

1. இவ்வழக்கின் விசாரணை ஏற்கனவே 06/11/2025 அன்று ஆணையத்தால் மேற்கொள்ளப்பட்டு, கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பித்திருந்தது.

> **“ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், வழக்கு எண். CP 3876/SCIC/2023 - மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன் கீழான 04/09/2023 தேதியிட்ட மனுவிற்கும், வழக்கு எண். CP 4077/SCIC/2023 - மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன் கீழான 16/09/2023 தேதியிட்ட மனுவிற்கும், விசாரணையின் போது ஆஜராகியுள்ள தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு.மு.சிவனேசன், சார்பதிவாளர், செட்டிகுளம் சார்பதிவகம் அவர்கள் எவ்வித தகவலையும் மனுதாரருக்கு அளிக்கவில்லை எனத் தெரிய வருகிறது. எனவே, திரு.மு.சிவனேசன், சார்பதிவாளர் என்பவர் மீது, சட்டப்பிரிவுகள் 20(1) மற்றும் 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை மேற்கொள்ளக் கூடாது என்பதற்கான காரண விளக்கத்தை, சார்பதிவாளர், செட்டிக்குளம் சார்பதிவகம் அவர்கள் 18/12/2025 அன்று ஆணையத்தில், நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.**
>
> **இன்றைய விசாரணையின் போது ஆஜராகியிருந்த பொதுத் தகவல் அலுவலர் திரு.மு.சிவனேசன், அவர்கள் ஆணையத்தின் விசாரணைக்கு எந்த ஒரு முன் தயாரிப்பும் இல்லாமல் ஆஜராகியிருந்தார். மேலும், அவரால் வழக்கு**

சம்பந்தமான தகவலின் நகல்களை ஆணையத்தின் முன் சமர்ப்பிக்க இயலவில்லை. மேலும், வழக்கிற்கு தொடர்பில்லாத தகவல்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்த நடவடிக்கை என்பது எந்த ஒரு பொதுத் தகவல் அலுவலரும் செய்ய முனையாத ஒரு பொருத்தமற்ற செயலாகும். அச்செயலை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள இயலாது.

எனவே, பதிவுத்துறைத் துணைத் தலைவர், திருச்சிராப்பள்ளி மண்டலம் அவர்கள் மேற்சொன்ன திரு.மூ.சிவனேசன், சார்பதிவாளர், செட்டிக்குளம் சார்பதிவகம் அவர்கள் அலட்சியப் போக்கோடு ஆணையத்தின் முன் செயல்பட்டதற்கு, அன்னார் மீது துறை ரீதியிலான நடவடிக்கை எடுப்பதோடு, அந்நடவடிக்கை குறித்த விவரத்தை நேரடியாகவோ அல்லது பிரதிநிதி வாயிலாகவோ 31/12/2025-க்குள் ஆணையத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது."

2. அதனைத் தொடர்ந்து இவ்வழக்கு 18/12/2025 மற்றும் 31/12/2025 ஆகிய தேதிகளில் ஆணையத்தால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

"மேற்குறிப்பிட்டவாறு 18/12/2025 அன்று ஆணையம் உத்தரவிட்டிருந்தவாறு திரு.மூ.சிவனேசன், சார்பதிவாளர், செட்டிகுளம் சார்பதிவகம் அவர்கள், அன்னாரின் மீதான காரண விளக்கக் கேட்புக் குறிப்பாணைக்கான விளக்கத்தை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

மேலும், இன்று (31/12/2025) திரு.J.கருணாகரன், மேலாளர், பதிவுத்துறைத் துணைத் தலைவர் அலுவலகம், திருச்சி மண்டலம் அவர்கள், ஆஜராகி ஆணையம் 06/11/2025 தேதியிட்டு பிறப்பித்த உத்தரவின்படி 29/12/2025 தேதியிட்ட அறிக்கையினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். எனவே, இப்புகார் மனு மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது."

3. மேற்சொன்னவாறு, திரு.மூ.சிவனேசன், சார்பதிவாளர், செட்டிகுளம் சார்பதிவகம் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட 15/12/2025 தேதியிட்ட காரண விளக்கக் கேட்புக் குறிப்பாணைக்கான விளக்கத்தை பரிசீலிக்கையில், அதனை ஆணையம் ஏற்கவில்லை. எனவே, திரு.மூ.சிவனேசன், சார்பதிவாளர் அவர்களுக்கு ஆணையம் ரூ.2,000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) அபராதம் விதிக்கிறது. அன்னார், இத்தொகையினை அரசு கணக்கில் செலுத்திவிட்டு, அதற்கான சான்றினை 29/04/2026 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது. இப்புகார் மனுக்கள் மீதான விசாரணை இத்துடன் முற்றாக்கப்படுகின்றன.

ஒம்./-(முகம்மது ஷகீல் அ்தர்)
மாநில தலைமை தகவல் ஆணையர்

//ஆணைப்படி//

உதவி பதிவாளர்

## வழக்கு எண்கள். CP 3876/SCIC/2023 & CP 4077/SCIC/2023

**பெறுநர்**

**பொதுஅதிகார அமைப்பு**

1.துணைப் பதிவுத்துறைத் தலைவர்
துணைப் பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்
திருச்சிராப்பள்ளி மண்டலம்
மாவட்ட ஆட்சியரக வளாகம்
திருச்சி - 620 001.

2.திரு.மு.சிவனேசன்,
பொதுத் தகவல் அலுவலர்
(தற்போது) சார் பதிவாளர்
சார் பதிவாளர் அலுவலகம்
செட்டிக்குளம், பெரம்பலூர்-621 104.

**புகார்தாரர்**

திரு அ.தினேஷ்குமார்
321, ராயல் நகர், வடக்கு மாதவி ரோடு
பெரம்பலூர் - 621 212.

நகல்

1.பதிவுத்துறைத் தலைவர்
பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்
100, சாந்தோம் நெடுஞ்சாலை
சென்னை - 600 028.

2.பதிவாளர் (for follow up)
தமிழ்நாடு தகவல் ஆணையம்
நந்தனம், சென்னை-35

RG/PC